# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2024 யூலை

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

### பகுதி A

**வினா இல. 01**

இது ‘‘செயன்முகமை வகிபாகம்’’ மற்றும் பங்குதாரர்களின் கணக்காய்வின் முக்கியத்துவம் பற்றிய நேரடியான கோட்பாட்டு ரீதியான ஒரு வினாவாகும். பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்ததுடன், பெரும்பாலானவர்கள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் இதனை கம்பனியின் எதிர்காலத்திலிருந்து அணுகியிருந்ததுடன், பங்குதாரர்கள் மீது கவனம் செலுத்தியதை விட உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தாக்கம் பற்றி ஆராய்ந்திருந்தனர். ஒட்டுமொத்தத்தில், இதற்கான பதில்கள் திருப்திகரமாகக் காணப்பட்டன.

**வினா இல. 02**

இவ்வினா, நடைமுறைச் சூழமைவை சட்டகப்படுத்தி, இலத்திரனியல் - சந்தைப்படுத்தல் கம்பனி ஒன்று ஓடர்களைச் செய்வதற்கும் அதன் இணையத்தளம் ஊடாக விளம்பரப்படுத்தல் செய்வதற்கும் பயன்படுத்துகின்ற இடர் முகாமைத்துவ கருவிகள் மீது கவனம் செலுத்தியிருந்தது. அனைத்து பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சிலர் சரியான கருவிகளைக் குறிப்பிட்டிருந்த அதே வேளை பல பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விளக்கங்களை வழங்கியிருந்தனர்.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த பிரதிபலிப்பு மோசமாகக் காணப்பட்டதுடன், அது தொடர்புடைய விடயம் மீது புரிதல் இல்லாததைக் காட்டுகிறது. விடைகள் பொதுவாக திருப்திகரமாக இல்லை.

**வினா இல. 03**

இந்த கோட்பாட்டுரீதியான வினா COSO வேலைச் சட்டகத்துடன் நேரடித் தொடர்புடையதாகும்.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்புக்கு முகாமையானது பொறுப்பாக இருப்பதுடன், அது ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும் என சரியாக விபரித்து இந்த வினாவுக்கு விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் வினாவைத் தவறாக விளங்கிக் கொண்டிருந்ததுடன், கணக்காய்வு அபிப்பிராயங்கள், பொருண்மை, மோசடி மற்றும் வழுக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் போன்றவற்றில் கவனம் செலுத்தி மோசமான விடைகளை வழங்கியிருந்தனர்.

**(b)** ஒரு நல்ல சதவீதத்தினர் வலுவான விடைகளை வழங்கியிருந்ததுடன், நிறுவனச் சூழல், கணக்காய்வு நடைமுறைகள், நிதி அறிக்கையிடல் என்பன போன்ற தலைப்புகளை ஆராய்ந்திருந்தனர். இது வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாததைப் பிரதிபலிக்கிறது.

ஒட்டுமொத்தத்தில், பரீட்சார்த்திகளின் பதில்கள் ஓரளவு சிறப்பானதாக இருந்தது.

### வினா இல. 04

தனித்தனிக் கணக்காய்வு ஈடுபடுத்தல்களை மேற்பார்வை செய்வதற்கான வழிகாட்டல்களில் உள்ளடக்கப்படும் விடயங்கள் பற்றி இவ்வினாவில் கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், பல பரீட்சார்த்திகள் வினாவைத் தவறாக விளங்கிக்கொண்டு, GRN (பொருள் பெறுவனவுச் சீட்டு), வரித் தாக்கல்கள், கணக்காய்வு அறிக்கையின் உள்ளடக்கம், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் கணக்காய்வு நியமங்களின் சில அம்சங்கள் போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

சிறிய சதவீதமானோர் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்ததுடன், ஒட்டுமொத்தத்தில் விடைகள் மோசமானதாக இருந்தன.

## பகுதி B

### வினா இல. 05

இது இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்ததுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனர்.

**(a)** விவரணமானது பல்வேறு அம்சங்களை முன்வைத்திருந்த போதிலும், வினாவானது கற்றல் புத்தகத்தில் கோடிட்டுக் காட்டப்பட்ட கோட்பாட்டுரீதியான பகுதிகளையே தெளிவாகக் கேட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் குறிப்பாக கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்துவதற்குப் பதிலாக கட்டுப்பாட்டு வகைகளை விபரித்திருந்தனர்.

**(b)** பதிலானது விபரிக்கப்பட்டுள்ள விவரணத்துடன் தொடர்புடையதா என்பது குறித்து தவறான புரிதல்கள் எழுந்திருந்தன. சில பரீட்சார்த்திகள் தலைவர் உள்ளிட்ட முகாமையினால் வேலையின் நோக்கெல்லை வரையறுக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரின் முன்னோக்கு அடிப்படையில், அவர்களது விடைகளை விவரணத்துடன் தொடர்புபடுத்தி விளக்கியிருந்தனர். கணக்காய்வாளர் தொடர்பான கருத்துக்கள் பிரதானமாக நிறுவன மட்டத்தில் இடர்கள் மற்றும் மோசடியை இனங்காண்பதற்கான அவர்களுடைய ஆற்றல்மீது மையப்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், விடைத்தாளில் வழங்கப்பட்ட விடைகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டன. சில பரீட்சார்த்திகள் உள்ளகக் கட்டுப்பாடுகளின் உள்ளார்ந்த வரையறைகளை தொடர்புபடுத்தியதன் மூலம் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

தவறாகப் புரிந்துகொள்வதைக் குறைப்பதற்காக, சாத்தியமானவிடத்து தமிழ் மொழிமூல வினாத்தாள்களில் ஆங்கில பதத்தை ‘‘சொல்லகராதி பதத்தை’’ (உண்மையான சொற்பதங்கள்) உள்ளிடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

### வினா இல. 06

இவ்வினாவானது தரப்பட்ட விவரணத்தின் மீது தெளிவாக கவனம் செலுத்தியிருந்தது.

**பகுதி (a)** ஆனது, மூன்று கட்டுப்பாட்டுப் பலவீனங்களை இனங்காணுவதைப் பரீட்சித்திருந்ததுடன், **பகுதி (b)** ஆனது, இனங்காணப்பட்ட பலவீனங்களை நிவர்த்திப்பதற்கான பரிந்துரைகளைக் கோரியிருந்தது. விவரணமானது தெளிவாக விபரிக்கப்பட்டிருந்ததால் அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிகளுக்கு விடையளித்திருந்ததுடன் நியாயமானளவு சரியாக விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சிலர் இனங்காணப்பட்ட பலவீனங்களை முறையாக நிவர்த்தி செய்வதை எழுதுவதற்குத் தவறியிருந்தனர். உதாரணமாக, அவர்கள் ‘‘நிதி மற்றும் வங்கி மூலம் கணக்கிடப்பட்ட மேலதிக நேரம்’’ ஆனது ஒரு பலவீனமாக உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தனர.

ஆனால் நேரடித் தொடர்பில்லாத கைரேகைப் பதிவு வருகையை செயல்படுத்துவது போன்ற பரிந்துரையொன்றை முன்மொழிந்தனர்.

**பகுதி (c)** ஆனது விசேடமாக IT கட்டுப்பாடுகளுடன் தொடர்புடைய பொதுக் கட்டுப்பாடுகள் இரண்டை உதாரணங்களுடன் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. கற்றல் புத்தகத்திலிருந்து விடைகளை வழங்கிய பரீட்சார்த்திகளுக்கு முழுப் புள்ளிகள் வழங்கப்பட்டன.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

## வினா இல. 07

**(a)** இவ்வினாவானது ஒரு புதிய கணக்காய்வு ஈடுபடுத்தலை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவை மதிப்பிடும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் ‘‘நடைமுறைகள்’’ என்ற பதம் காரணமாக வினாவைத் தவறாக விளங்கியிருந்ததுடன் உறவுமுறைத் தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை, கடந்தகால நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல் மற்றும் சபைக் குறிப்புகள் போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். செயலாற்றுகை திருப்தியாக இல்லை.

**(b)** இது சுயாதீனம் மற்றும் இணக்கத்திற்கான அச்சுறுத்தல்கள் போன்றவற்றில் பரீட்சார்த்திகளின் அறிவை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது :

(1) கணக்காய்வுப் பங்காளரின் துணைவி கணக்காய்வுச் சேவைநாடுநரின் நிதிக் கட்டுப்பாட்டாளராக இணைந்து கொண்டமை : பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்ளக் கூடாது எனக் குறிப்பிட்டு, சுயாதீனம் மற்றும் சுய – நாட்டம் ஆகியவற்றின் மீதான தாக்கத்தை விபரித்திருந்தனர். வினாவுக்கு விடை அளித்திருந்த அதிகளவான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

(2) அதே நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்ட அலகு நம்பிக்கையில் பங்காளர் முதலீடு செய்தமை : சில பரீட்சார்த்திகள் வினாவைத் தவறாக விளங்கிக் கொண்டிருந்ததால் சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சிலர் சுயாதீனத்திற்கான அச்சுறுத்தலை சரியாக இனங்கண்டிருந்ததுடன் ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்ளக் கூடாது என ஆலோசனை வழங்கியிருந்தனர்.

(3) நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்ட வங்கி ஒன்றிடமிருந்து பொருள் கடனொன்றை நிறுவனம் பெற்றுக்கொண்டமை : கடனானது நிறுவனத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ஆனால் தனிப்பட்ட பங்காளரால் அல்ல என்பதால் பரீட்சார்த்திகள் நிச்சயமற்ற தன்மையைக் காட்டியிருந்தனர். பலர் கடனானது சாதாரண வங்கியியல் நிபந்தனைகளின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பது பற்றி கவனத்திற் கொள்ளாது சுயாதீனம் மீது மாத்திரம் கவனத்தைச் செலுத்தி கணக்காய்வை ஏற்றுக்கொள்ளக்கூடாது என ஆலோசனை வழங்கியிருந்தனர்.

மேலே 1 ஆவது மற்றும் 2 ஆவது சந்தர்ப்பங்களில் அதிகளவான பரீட்சார்த்திகள் ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்ளக்கூடாது என பரிந்துரைத்திருந்தனர். அதே வேளை ஒரு சிலர் மற்றைய பங்காளரினால் நெருக்கமாகக் கண்காணிப்பதன் ஊடாக இடர்களைக் குறைப்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். மேலேயுள்ள 3 ஆவது சந்தர்ப்பத்தில் பரீட்சார்த்திகள் கணக்காய்வு செய்யப்பட்ட வங்கியிலிருந்து நிறுவனம் பெற்றுக்கொண்ட கடனானது சுயாதீனம் மீது தாக்கம் செலுத்துமா என்பது பற்றி தெளிவின்மையால் அது அவர்களின் விடைகளில் குழப்பநிலைக்கு

வழிவகுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. வங்கியானது அதன் சாதாரண வணிக நடைமுறையின் கீழ் கடனை வழங்கியிருந்த போதிலும், பரீட்சார்த்திகள் கணக்காய்வு ஈடுபடுத்தலின் நடைமுறை அனுபவத்துடன் இந்த வினாவை மிகவும் பயனுறுதிவாய்ந்த விதத்தில் கையாண்டிருந்தனர்.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிதமான மட்டத்தில் காணப்பட்டது.

## <u>பகுதி C</u>

### வினா இல. 08

இது ஐந்து பகுதிகளைக் கொண்ட 25 புள்ளிகளுக்கான ஒரு வினாவாகும். இங்கு ஏற்பனவிலிருந்து கணக்காய்வின் முடிவில் ஒரு அபிப்பிராயத்தை வழங்குவது வரையான கணக்காய்வுச் செயன்முறைகளின் பல்வேறு அம்சங்களிலும் உள்ள அறிவு பரீட்சிக்கப்பட்டது. இவ்வினா கோட்பாட்டு ரீதியான அறிவின் பிரயோகத்தை மதிப்பிடுவதற்கும் ஒரு அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கான அகநிலைச் சிக்கல்களை மதிப்பிடுவதற்குமாக வடிவமைக்கப்பட்டிருந்த போதிலும், **பகுதிகள் (a)** தொடக்கம் **(d)** வரையானவை அடிப்படைக் கோட்பாட்டு ரீதியான வினாக்களாக இருந்தன. இதனால் கணக்காய்வு நியமங்கள் பற்றிய அடிப்படைப் புரிதலை பரீட்சார்த்திகள் கொண்டிருந்திருப்பின் இவ்வினாக்களுக்கு விடையளித்திருக்க முடியும்.

**(a)** இது ஒரு ஈடுபடுத்தலின் கூறுகள் தொடர்பானதாகும்.

**(b)** இது, ஒரு கணக்காய்வாளர் திருத்தப்பட்ட அல்லது புதிய ஈடுபடுத்தல் கடிதம் ஒன்றை வழங்க வேண்டிய நிலைமைகள் அல்லது சந்தர்ப்பங்களைப் பற்றியதாகும்.

**(c)** இது, முகாமையிடமிருந்து விசாரிக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

**(d)** இது கணக்காய்வில் பொருண்மையின் முக்கியத்துவத்தை விபரிக்கிறது.

இந்தப் பகுதிகள் தீர்ப்பையோ அல்லது அகநிலை மதிப்பீட்டையோ கோரவில்லை. அவை கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்களில் கவனம் செலுத்தியிருந்தன.

பல பரீட்சார்த்திகள் கணக்காய்வு நியமங்களுடன் பரிச்சயமற்றவர்களாக இருந்ததை வழங்கப்பட்ட விடைகள் சுட்டிக்காட்டுகின்றன. அதே வேளை அதிகளவானவர்கள் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனர். அதில் பெரும்பாலானவர்கள் **பகுதிகள் (a)**, **(b)**, **(d)** இற்கு நியாயமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாதது போன்று **பகுதி (c)** இற்கு மோசமாக விடை அளிக்கப்பட்டிருந்தது.

**(e)** ஆளுகை பாரப்படுத்தப்பட்டோருடன் தொடர்பாடுவதற்கு முன்னர், இனங்காணப்பட்ட பிறழ்கூற்றுக்களை மதிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகளின் விடைகள் தொடர்பில் கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன :

(1) ஒரு சில பரீட்சார்த்திகள், பொருண்மை மட்டத்திற்கு கீழுள்ளதாலும் அபிப்பிராயம் மீது எந்தத் தாக்கமும் இல்லை என்பதாலும் இந்தப் பிரச்சினையை பொருளாகக் கவனத்திற் கொள்ளத் தேவையில்லை எனச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலானவர்கள் கணக்காய்வாளர் இப்பிரச்சினையை சரிசெய்ய வேண்டும், முறைமையில் விசேட புலனாய்வுகளை நடத்த வேண்டும் போன்ற நடவடிக்கைகளைப் பரிந்துரைத்து, சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்தனர்.

(2) முதலாவது பிரச்சினையைப் போன்றே, மிகச் சில பரீட்சார்த்திகள் மொத்தத் தொகை பொருண்மை மட்டத்தை விட மிகையாக இருப்பதால் பிரச்சினையைச் சரிசெய்ய முகாமைத்துவத்திடம் தெரிவிக்கப் பரிந்துரை செய்திருந்ததுடன், முகாமை அதை மறுத்தால், கணக்காய்வாளர் மாற்றப்பட்ட அபிப்பிராயத்தை கவனத்திற் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர். சிலர் நோக்கெல்லை வரையறை காரணமாக பாதகமான அபிப்பிராயத்தைப் பயன்படுத்த பரிந்துரைத்தனர். ஆனால் அதிகளவான பரீட்சார்த்திகள் மொத்த வேறுபாடுகள் தொடர்பில் புரிந்து கொண்டிருக்கவில்லை. அவர்கள் அபிப்பிராயம், இணங்காமை அல்லது நோக்கெல்லை வரையறை பற்றி எதையும் குறிப்பிடாது கணக்காய்வாளர் தேவையான சீராக்கங்களை சரிசெய்ய வேண்டுமென கருதியிருந்தனர்.

(3) குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தேவையான சீராக்கங்கள் செய்யப்படும் என இணங்கியிருப்பதால் இந்தப் பிரச்சினை அபிப்பிராயத்தைப் பாதிக்காது என சரியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(4) அதிகளவான பரீட்சார்த்திகள் ஈடுபடுத்தல் பங்காளர் சுழற்சி முறையில் மாற்றப்படுகின்ற போதிலும் ஒரு ஈடுபடுத்தல் கடிதத்தை வழங்கத் தேவையில்லை எனத் தவறாகக் குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் ஆண்டின் காலப்பகுதியில் உரிமைத்துவ மாற்றத்தை ஏற்பிசைவு செய்யத் தவறியிருந்தனர். ஈடுபடுத்தல் பங்காளர் ஒரு ஈடுபடுத்தல் கடிதத்தை அனுப்புவது சிறந்ததாகும் எனவும் அவ்வாறு ஒன்றை வழங்குவதில் எந்தத் தீங்கும் இருக்காது எனவும் நப்புகிறார். ஆனால் இது அதிகளவான பரீட்சார்த்திகளால் அடையாளம் காணப்படவில்லை.

வினாவின் இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

## வினா இல. 09

25 புள்ளிகளுக்கான இந்த விவரண வகை வினாவானது சான்றுகளை மதிப்பிடுதலும் உறுதிப்படுத்தல் நடைமுறையின் பொருத்தப்பாட்டுத்தன்மையையும், அபிப்பிராயத்திற்கான குறித்த கட்டணத்தின் தாக்கம், வலியுறுத்தல் விடயப் பந்தியை கவனத்தில் கொள்வதற்கான சூழ்நிலைகள் மற்றும் தொடர்ந்தியங்கும் என்ற எண்ணக்கருவை இனங்காணுதல் போன்ற சில குறிப்பான பகுதிகளில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

**(a)** இவ்வினா ஒரு விவரணத்தை முன்வைத்திருந்த போதிலும், வெவ்வேறு வடிவங்களில் வழங்கப்படும் சான்றுகளின் தரத்தை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்ட நேரடி வினாவாக இருந்தது. பரீட்சார்த்திகளின் விடைகளை மீளாய்வு செய்யும்போது, சான்றுகளின் நம்பகத்தன்மை மற்றும் பயனுறுதித்தன்மையை விமர்சன ரீதியாக மதிப்பிடுவதற்குப் பதிலாக சான்றுகளை விபரிப்பதில் கவனம் செலுத்தி, வினாவைப் புரிந்துகொள்ள பலர் சிரமப்பட்டதாகத் தெரிகிறது. இதன் விளைவாக, அவர்கள் சான்றுகளின் வலிமையை முறையாக மதிப்பிடத் தவறியிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் கடன் சரிபார்ப்பு கனிஷ்ட கணக்காய்வாளர் ஒருவரால் கையாளப்படுதல், வங்கி உறுதிப்படுத்தலின் நம்பகத்தன்மை, கடன் உடன்படிக்கை மீறல்களைத் தீர்ப்பதன் முக்கியத்துவம் போன்ற முக்கியமான அம்சங்களைக் குறிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். மேலும், கேள்விக் கடிதம் தொடர்பான சட்ட அபிப்பிராயம் அல்லது சட்டத்தரணியின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை அவர்கள் கவனிக்கவில்லை. இத்தகைய பிரதான விடயங்கள் முழுமையான புள்ளிகளைப் பெற அவசியமானதாகும்.

**(c)** மின்பிறப்பாக்கியை இறக்குமதி செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள செலுத்திய விசேட கட்டணம் தொடர்பில் குறிப்பிடத்தக்க தவறான புரிதல்கள் இருப்பதாகத் தெரிகிறது. முதன்மையான பிரச்சினை வகைப்படுத்தலில் உள்ளது. சில பரீட்சார்த்திகள் இதனை பல்வேறு வழிகளில் விளக்குகிறார்கள் : ஒரு சிலர் விசேட கட்டணங்கள் கணக்காய்வாளருக்குச் செலுத்தப்பட்டன என நம்புகிறார்கள். அதே சமயம், மற்றையவர்கள் அதனை இலஞ்சம் எனச் சந்தேகிப்பதுடன் அது புலனாய்வு செய்யத்தக்க மோசடி என அறிக்கையிட்டனர். பல பரீட்சார்த்திகள் பொருத்தமான சான்றுகள் இல்லாததை காரணங்காட்டி, பொருண்மை மட்டம் மற்றும் அவர்களது அபிப்பிராயத்தின் தகைமையை போதியளவு நியாயப்படுத்தி, தொகையை ஒப்பீடு செய்யத் தவறியிருந்ததால் அவர்கள் புள்ளிகளைப் பெறச் சிரமப்பட்டிருந்தனர். இருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் அதற்கேற்ப அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டுமென பரிந்துரைத்திருந்தனர்.

**(d)** தரப்பட்ட விவரணத்தை அல்லது கற்றல் புத்தகத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஏதாவது வேறு சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்ட விடயப் பந்தியின் வலியுறுத்தல் தொடர்பான மற்றுமொரு வினா இதுவாகும். புள்ளிகளை ஒதுக்கும்போது இரு அம்சங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் கோட்பாடு மற்றும் சம்பந்தப்பட்ட விடயங்களை பயனுறுதிமிக்க வகையில் கூட்டிணைத்து வலுவான பதில்களை வழங்கியிருந்தனர். இதனால் முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

வினாவின் இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் காணப்பட்டது.

\- - - -

## தேர்வு நாடிகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்த கவனத்தில் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்

1. பாடநூலை கவனமாக வாசித்து அதில் வழங்கப்பட்டுள்ள பகுதிகள் விளங்கிக் கொள்ள வேண்டும்
2. இப்பாடத்துடன் தொடர்புடைய நூல்கள் கையேடுகள் மடல்கள் நாட்குறிப்புகளை வாசிக்கவும்
3. செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதோடு அச்செயல் வினைச் சொற்களுக்கு அமைவாக கேள்விகளுக்கு விடை அளிக்க பயிற்சி செய்தல்
4. குறைந்தது கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கான கடந்த கால வினாக்களை பயிற்சி செய்வதோடு எவ்வாறு கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ளல்
5. கேள்வியில் வழங்கப்பட்டுள்ள கருத்தியல்களையும் அவற்றின் பிரயோகங்களையும் புரிந்து கொள்ளல்
6. கடந்த கால வினாத்தாள்களில் பரிட்சிக்கப்பட்ட பாடநூலில் காணப்படும் பகுதிகளில் சிறு குறிப்புகளை எடுத்து அவற்றை தெளிவாக விளங்கிக் கொள்ளல்
7. கடந்த கால வினாத்தாள்களை நேரத் திட்டமிடலுடன் விடை அளித்து பழகல்
8. பாடநூலில் காணப்படும் அத்தியாயங்களுக்கு சிறு குறிப்பு எடுத்து அவற்றை மனப்பாடம் செய்தல்
9. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுத பழகல்
10. கேள்விகளுக்கு விடை அளிக்க முன் அறிவுறுத்தல்களை தெளிவாக வாசித்தல்
11. சரியான மனநிலையில் பரீட்சை எழுதல்
12. புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கேள்விக்கும் ஆன நேர ஒதுக்கீட்டை தீர்மானித்தல்
13. விடைத்தாள்களை கையளிக்கும் முன் எல்லா வினாக்களுக்கும் சரியாக விடையளிக்கப்பட்டுள்ளதா மேலும் இலக்கங்கள் சரியாக இடப்பட்டுள்ளது என இரு முறை பார்த்தல்.

- * * * -